(எட்டாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 5.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2020 சனவரி 21, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ மஹிந்த அமரவீர,** போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மற்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** வெளிநாட்டு உறவுகள் அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ எஸ். எம். சந்திரசேன,** சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சர் மற்றும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்,** பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட சீர்திருத்தங்கள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர் மற்றும் சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி,** மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர்

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன,** வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலும் அமுனுகம,** போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** அரச முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,** மின்சக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** சுதேச வைத்திய சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** மனித உரிமைகள் மற்றும் சட்டச் சீர்திருத்தங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விமலவீர திசாநாயக்க,** வனசீவராசிகள் வளங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா,** கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** சமூகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** மகளீர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** உள்ளக வர்த்தக மற்றும் பாவனையாளர் நலனோம்புகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** சமுதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** ஏற்றுமதிக் கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** தேயிலைக் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய,** கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,** பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கடன் திட்டங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,** வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** துறைமுக அபிவிருத்தி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ வஜிர அபேவர்தன

கௌரவ அசோக் அபேசிங்க

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ ஆனந்த அலுத்கமகே

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே

கௌரவ வசந்த அலுவிஹாரே

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ மனோ கணேசன்

கௌரவ துனேஷ் கன்கந்த

கௌரவ சந்திம கமகே

கௌரவ தயா கமகே

கௌரவ பியசேன கமகே

கௌரவ சிறிபால கமலத்

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர

கௌரவ எட்வட் குணசேகர

கௌரவ டி.வீ. சானக

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ நலின் பண்டார ஜயமஹ

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ லக்கி ஜயவர்தன

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ க. துரைரெட்ணசிங்கம்

கௌரவ எம்.எஸ். தௌபீக்

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த**

**கௌரவ எஸ். பீ. நாவின்ன**

**கௌரவ புத்திக பத்திரண**

**கௌரவ கருணாரத்ன பரணவிதான**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா**

**கௌரவ டிலான் பெரேரா**

**கௌரவ நிரோஷன் பெரேரா**

**கௌரவ அஜித் பி. பெரேரா**

**கௌரவ லக்ஷ்மன் வசந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ பாலித ரங்கே பண்டார**

**கௌரவ சாந்த பண்டார**

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ றிஸாட் பதியுதீன்**

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

கௌரவ திலக் மாரபன

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே

கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

கௌரவ அர்ஜுன ரணதுங்க

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ சாகல ரத்நாயக்க

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ அங்கஜன் இராமநாதன்

கௌரவ ரன்ஜன் ராமநாயக்க

கௌரவ வருண லியனகே

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ ருவன் விஜேவர்தன

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ ச. வியாழேந்திரன்

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ ரவீந்திர சமரவீர

கௌரவ சந்தித் சமரசிங்க

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ முத்து சிவலிங்கம்

கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன**

**கௌரவ சுஜீவ சேனசிங்க**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ வசந்த சேனாநாயக்க**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன**

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ டீ. பி. ஹேரத்**

**கௌரவ மனோஜ் ஹேவாகம்பலகே**

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

"அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிற்கு தற்போது கிடைத்துள்ள, இலங்கை மத்திய வங்கியினால் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி பிணைமுறிகள் விநியோகம் தொடர்பில் விசாரணை செய்து அது தொடர்பிலான விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்கென நியமிக்கப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி குறித்த திறைசேரி பிணை முறிகள் விநியோகம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட தடயவியல் கணக்காய்வு அறிக்கையை பாராளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் அறிந்து கொள்ளும் வகையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பல உறுப்பினர்கள் 2020 சனவரி 03 ஆம் திகதி சபையிலும், அதற்கு வெளியிலும் தொடர்ச்சியாக முன்வைத்த வேண்டுகோள்களும், 2020 சனவரி 13 ஆம் திகதி பாராளுமன்றத்தின் கட்சித் தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் என்னுடன் நடாத்திய கூட்டத்தின் போது முன்வைத்த வேண்டுகோள்களையும், கவனத்திற் கொண்டு அது தொடர்பிலான எனது தீர்மானத்தினைப் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க நான் கருதுகிறேன்.

2015 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட சர்ச்சைக்குரிய திறைசேரி பிணைமுறி விநியோகம் தொடர்பாக பாராளுமன்றத்தின் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் 2016 ஆம் ஆண்டில் மேற்கொண்ட புலனாய்வின் போது, குறித்த திறைசேரி பிணைமுறி விநியோகம் தொடர்பில் ஆழமாக ஆராய்ந்து அதனூடாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட திட்டவட்டமான நட்டம் எந்தளவு என்பதனை அறிந்து கொள்ளும் தேவைப்பாட்டினை கவனத்திற் கொண்டு விதப்புரைகள் வழங்கப்பட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்து, மேற்படி திறைசேரி பிணைமுறி விநியோகம் தொடர்பிலான விசாரணையொன்றினை மேற்கொண்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி, இலங்கை மத்திய வங்கியின் நெறிப்படுத்தலில் குறித்த திறைசேரி பிணைமுறி விநியோகம் தொடர்பில் "தடயவியல் கணக்காய்வு" ஒன்றினை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை மத்திய வங்கி தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படுகின்ற வருடாந்த அறிக்கை மற்றும் அதன் கணக்குகள் பற்றிய அவதானிப்புகள் தொடர்பில் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு பரிசீலித்த சந்தர்ப்பத்தில், இந்த தடயவியல் கணக்காய்வினை மேற்கொள்ளல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள், அதன் செயற்பாடுகள் மற்றும் அதற்கு உறப்படுகின்ற கிரயம் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட அலுவலர்களால் குழுவின் முன்னிலையில் விபரமான சாட்சி வழங்கும் சந்தர்ப்பத்தில் தெரிவிக்கப்பட்டதாக கண்டறியப்பட்டது.

அவ்வாறான கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்வது தொடர்பில் விசேட திறமைகளையும் தகைமைகளையும் கொண்ட சர்வதேச தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட அத்தடயவியல் கணக்காய்வு பற்றிய இறுதி அறிக்கையொன்று இலங்கை மத்திய வங்கிக்கு கிடைத்திருந்த அதேவேளை அந்த அறிக்கையை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிடம் சமர்ப்பிக்குமாறு அக்குழுவின் தவிசாளரால் முன்வைக்கப்பட்ட எழுத்துமூல வேண்டுகோளுக்கமைவாக சட்டத்துறை தலைமையதிபதியின் ஆலோசனையின் படி, திறைசேரி பிணைமுறி விநியோகம் தொடர்பில் நடாத்தப்படுகின்ற மற்றும் எதிர்வரும் காலங்களில் நடாத்தப்படவுள்ள நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்படி குழுவின் உறுப்பினர்களுக்கு மாத்திரம் பெற்றுக் கொடுப்பதற்காக அந்த அறிக்கை இலங்கை மத்திய வங்கியினால் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன் பின்னர், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் இவ்வறிக்கை சம்பந்தமாக மேற்கொள்ளப்படவேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான கூட்டமொன்றை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், 2019.12.02 ஆம் திகதி எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டமையால் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் இயக்கநிலை அற்றுப்போயிற்று.

எட்டாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடருக்காக அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினை மீண்டும் தாபித்து அக்குழுவினால் இவ்வறிக்கை சம்பந்தமாக எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள மேலும் கணிசமான காலம் கழிய இடமுள்ளமையால் மேற்சொல்லப்பட்ட குழு இயங்காநிலையிலுள்ள இக்காலப்பகுதியில் அத்தகைய குழுவின் பொறுப்பாளர் என்ற வகையில் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களையும் பொறுப்புகளையும் நான் இங்கு கவனத்திற்கொண்டேன்.

அதன்படி, குறிப்பாக பொதுப் பணம் மீதான கட்டுப்பாடு பற்றிய பூரணமான அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உள்ளதெனும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடனும், குறிப்பாக அது சம்பந்தமாக அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு கொண்டுள்ள தத்துவங்களுடனும் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 136 இன் பிரகாரம் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப்போன்றே பாராளுமன்றத்தின் அலுவல்கள் தொடர்பில் எந்தவிதமான வெளித்தரப்பினரதும் இடையீடின்றி சுயாதீனமான முடிவினை எடுக்கும் உரிமையை வலியுறுத்தி எனக்கு முன்னோடியாகத் திகழ்ந்த முன்னாள் சபாநாயகர் கௌரவ அநுர பண்டாரநாயக்க அவர்கள் வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பும் இங்கு விசேடமாக கவனத்தில் கொள்ளப்பட்டது.

அதைப்போலவே இந்த தடயவியல் கணக்காய்வு அறிக்கையை தயாரிப்பதற்காக சர்வதேச மற்றும் உள்நாட்டு மட்டத்திலான சிறப்பறிஞர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள பெருந்தொகையான கிரயம் உறப்பட்டுள்மையால் இவ்வறிக்கையை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களுக்கு மாத்திரம் வழங்குவதைப் பார்க்கிலும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்குவது பொருத்தமானதென நான் நம்புகிறேன்.

மேலும், அரசியலமைப்பின் 14அ உறுப்புரையின் பிரகாரம் தகவல்களை அணுகுவதற்கான அடிப்படை உரிமை மீதும் என்னால் இங்கு கவனஞ் செலுத்தப்பட்டதென்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கமைவாக, இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி பிணைமுறிகளின் விநியோகம் சம்பந்தமான 'தடயவியல் கணக்காய்வு அறிக்கை' இன்றைய தினம் பாராளுமன்றத்தில் சமரப்பிக்கப்படுவது பொருத்தமானதென நான் தீர்மானிக்கிறேன்.

மேலும், இந்த திறைசேரி பிணைமுறி விநியோகம் தொடர்பாக ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள நீதிமன்ற நடவடிக்கைகள் முறைமைசார்ந்தவகையிலும் சட்டமுறையான நிலைமையின்கீழும் பேணிவரப்பட இந்த முடிவு எவ்விதத்திலும் மேற்சொல்லப்பட்ட நீதிமன்ற செயற்பாடுகளுக்கு தடையாகவோ அல்லது அழுத்தம் கொடுக்கவோ வாய்ப்பினை ஏற்படுத்த மாட்டாதென்பது எனது நம்பிக்கையாகும்.''

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் —

(i) 2016 ஆம் ஆண்டுக்கான நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர், 2018.03.01 முதல் 2018.10.26 வரையிலான காலப்பகுதிக்கான அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் 2019.10.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் —

(i) 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2019.11.01 முதல் 2019.11.30 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள்

பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு;

(ii) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூலை 10 ஆம் திகதிய 2131/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iii) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2135/55 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iv) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய 2135/68 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(v) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 14 ஆம் திகதிய 2145/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(vi) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசெம்பெர் 01 ஆம் திகதிய 2151/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியற்றைச் சமர்ப்பித்து அக்குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு மற்றும் கட்டளைகள், அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் —

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4) (ஆ) ஆம் பிரிவின் கீழ் கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் பணிப்பாளருக்குப் பதிலாக 2019 ஆகஸ்ட் 01 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் தகுதிவாய்ந்த அதிகாரியாக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஹேரத் முதியன்சலாகே உதய பண்டார ஹேரத் அவர்களை நியமித்தல் தொடர்பில் நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 2137/96 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4) (ஆ) ஆம் பிரிவின் கீழ் கட்புல மற்றும் அரங்கேற்றற் கலைக்கான பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்குப் பதிலாக 2019 டிசம்பர் 13 ஆம்

திகதி நடைமுறைக்கு வரும் வகையில் தகுதிவாய்ந்த அதிகாரியாக எமிரிடஸ் பேராசிரியர் வீரக்கோன் முதியன்சேலாகே அபயரத்ன பண்டார அவர்களை நியமித்தல் தொடர்பிலும் 2019 செப்டெம்பர் 24 ஆம் திகதிய 2142/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையினை ஒழிக்கும் பொருட்டும் உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசெம்பர் 13 ஆம் திகதிய 2153/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(iii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4) (ஆ) ஆம் பிரிவின் கீழ் கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் பணிப்பாளருக்குப் பதிலாக 2019.12.13 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் தகுதிவாய்ந்த அதிகாரியாக சிரேட்ட பேராசிரியர் (திருமதி) ஜனிதா அபேவிக்ரம லியனகே அவர்களை நியமித்தல் தொடர்பிலும் 2019 நவம்பர் 07 ஆம் திகதிய 2148/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையினை ஒழிக்கும் பொருட்டும் உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசெம்பர் 13 ஆம் திகதிய 2153/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அக்கட்டளைகளை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: வலுவாதார அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் சார்பாக குழு உறுப்பினர் கௌரவ சந்தித் சமரசிங்க, அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, "1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்" தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பாராளுமன்ற அலுவல்கள் :** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 முதல் 25 ஆம் இலக்கங்கள் மற்றும் 29 முதல் 46 ஆம் இலக்கங்கள் வரையான விடயங்கள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**5. தெரிவுக் குழு (இல.1) :** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 114 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் தெரிவுக் குழுவானது தவிசாளராக சபாநாயகரையும் ஒவ்வோர் அமர்வுத்தொடரினதும் தொடக்கத்தில் பாராளுமன்றத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்படவேண்டிய அரசியல் கட்சிகளின் தலைவர்களையோ அல்லது அவர்களின் நியமத்தர்களையோ உள்ளடக்கிய பதினேழு (17) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**6. தெரிவுக் குழு (இல.2):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— இன்றைய தினம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் பிரகாரம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அங்கத்துவ உறுப்பினர்களுக்கு மேலதிகமாக பின்வரும் பதினேழு (17) உறுப்பினர்களும் தற்போதைய கூட்டத்தொடரின் தெரிவுக்குழுவில் சேவையாற்றுவார்களாக:-

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ மனோ கணேசன்

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ மாவை சோ. சேனாதிராசா

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**7. சட்டமூலம் கொண்டுவர அனுமதி :** கௌரவ சிசிர ஜயகொடி வழிமொழிய கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர் சமர்ப்பித்த சட்டமூலம்,— " 1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, கண்டிய விவாகம், மணநீக்கச் சட்டத்தை நீக்குவதற்கானதொரு சட்டமூலம்"

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52 (6 ) இன் கீழ் அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**8. கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1 ):** கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(தஇ) மற்றும் 61(1)(தஈ) பிரிவின் கீழ் இலங்கை நீர்ப்பரப்பினுள் மீன் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்களை பேணிக்காத்தல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச் 03 ஆம் திகதிய 2008/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பி.ப. 2.51 மணிக்கு கௌரவ பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.21 மணிக்கு கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்குவாராக" என கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 3.56 மணிக்கு கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்கினார்.)

“கௌரவ மயந்த திசாநாயக்க தலைமை தாங்குவாராக” என கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 4.54 மணிக்கு கௌரவ மயந்த திசாநாயக்க தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**9. கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2):** கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 28 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈட்டிகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்தல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச் 03 ஆம் திகதிய 2008/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**10. கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3):** கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சர்சமர்ப்பித்த பிரேரணை,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் பிரிவு 29 மற்றும் பிரிவு 61(1)(ப) என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் தம்புவா மீன் இனங்களைப் பிடிப்பதைத் தடைசெய்தல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 ஏப்ரல் 11 ஆம் திகதிய 2014/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**11. கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4):** கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(ப) பிரிவின் கீழ் மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி முகாமைத்துவம் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவரால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 15 ஆம் திகதிய 2023/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**12. கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5):** கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 64(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61(1)(ஆ) பிரிவின் கீழ் மாதல் மீன்பிடி (கரைவலை) தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஏப்ரல் 05 ஆம் திகதிய 2065/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**13. கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 6 ):** கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(ந) பிரிவின் கீழ் வெளிநாட்டுக் கொடி ஏற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளில் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்ற இலங்கைப் பிரசைகளுக்கான ஆகக்குறைந்த நியமங்கள் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 சனவரி 25 ஆம் திகதிய 2107/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**14. கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 7 ):** கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 6, 7, 8, 9 மற்றும் 10 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 பிரிவின் கீழ் மீன்பிடித் தொழிற்பாடு தொடர்பில் கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 18 ஆம் திகதிய 2115/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**15. ஒத்திவைப்பு (பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்கான முறையான வேலைத்திட்டம்)** : "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம தலைமை தாங்குவாராக" என கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர் மற்றும் சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 7.00 மணிக்கு கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம் பி.ப. 7.18 மணிக்கு, 2020 சனவரி 22 ஆம் திகதி புதன்கிழமை பி. ப. 1.00 வரை ஒத்திவைக்கப்பட்டது.